Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.**23/2021**

Deposition of PW2 Witness forfendce

Defence Court

Name :Durga Case:

Father's Name :Gnanamuthu calling:

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the **08st December 2021.**

**முதல் விசாரணை**

நான் கதவு எண்.48, அன்பு நகர், மாதா கோயில் தெரு, திருவேற்காடு, சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். இறந்து போன அஜீத் குமார் என்னுடைய மகன் ஆவார். என்னுடைய மூத்த மகன் பெயர் ராஜா ஆகும். இறந்து போன அஜீத்குமாரின் மனைவி பெயர் கீர்த்திகா ஆகும். என்னுடைய மகன் அஜீத் குமாருக்கு சதாம்உசேன், பிரதீப், லால், செந்தில் ஆகியோர் நண்பர்கள் ஆவர். லால் உடன் இருக்கும் மற்ற பையன்களின் பெயர் எனக்கு தெரியாது. ஆனால் ஆட்களை தெரியும். அவர் தற்போது நீதிமன்றத்தில இருக்கிறார்கள். என்னுடைய மகன் அஜித்குமாருக்கும் லாலுக்கும் சிறையில் இருக்கும் போது பழக்கம் ஆகியிருக்கிறது. லால் கஞ்சா விற்பதாகவும் அதை தான் வெளியில் சொல்லிவிடுவேன் என்று நினைத்து தன்னை லால் மிரட்டுவதாக என்னிடம் எனது மகன் அஜித் குமார் கூறினார். கஞ்சா விற்பதை வெளியில் சொன்னால் உன்னை கொன்று விடுவேன் என்று லால் மிரட்டுவதாக அஜித்குமார் கூறினார். சம்பத்தன்று நான் வேலைக்கு

சென்றிருந்தேன். காலை சுமார் 8.30 மணிக்கு என்னுடைய மருமகள் கீர்த்திகா எனக்கு போன் செய்து அஜித்குமாரை லால் வெட்டிவிட்டதாகவும் அதனால் சீக்கிரம் வருமாறும் கூறினார். உடனே என்னுடன் வேலை செய்து கொண்டிருந்த என் மூத்த மகன் ராஜாவிடம் விவரத்தை கூறினேன். பின்னர் நானும் என் மூத்த மகன் ராஜாவும் இன்ஜினியர் வந்தவுடன் தகவல் சொல்லவிட்டு வீட்டிற்கு வந்தோம். அப்போது வீட்டில் என் மருமகள் கீர்த்திகாவும் பிரதீபும் இருந்தார்கள். நாங்கள் நால்வரும் சேர்ந்து அபிராமி நகர் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு என்னுடைய மகன் அஜித்குமார் தலை, கை மற்றும் கால் ஆகிய இடங்களில் வெட்டுக் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். இது சம்பந்தமாக என் மருமகள் கீர்த்திகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**